அக்டோபர் - 2016

பொருளியல் [XII]

விடைகளுடன்

[நேரம் : 3 மணி] **[மொத்த மதிப்பெண்கள்: 200]**

பகுதி – அ

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக. **14 × 1 = 14**

1. நிகர பொருளாதார நலம் பற்றிய கருத்தை எடுத்துரைத்தவர் :
   அ) சாமுவேல்சன்
   ஆ) ஆல்ஃபிரடு மார்ஷல்
   இ) ஆடம் ஸ்மித்
   ஈ) இலயனல் ராபின்ஸ்
2. பழமை பொருளாதாரம் என்பது :
   (அ) தன்னிறைவுப் பொருளாதாரம்
   (ஆ) சந்தை பொருளாதாரம்
   (இ) கட்டளைப் பொருளாதாரம்
   (ஈ) பணவியல் பொருளாதாரம்
3. பயன்பாடு என்பது :
   (அ) சமூக கருத்து
   (ஆ) உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் கருத்து
   (இ) அரசின் கருத்து
   (ஈ) அறிவியல் கருத்து
4. தேவை விதி உணர்த்துவது :
   அ) விலை, பண்டங்களுக்கு உள்ள தலைகீழ் உறவு
   ஆ) விலை, பண்டங்களுக்கு உள்ள நேரடி உறவு
   இ) இரண்டும் ஈ) எதுவுமில்லை
5. விலையில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப தேவையின் மாற்றத்தை தோற்றுவிக்கும் அளவு.
   அ) வருமான தேவை நெகிழ்ச்சி
   ஆ) குறுக்கு தேவை நெகிழ்ச்சி
   இ) விலைத் தேவை நெகிழ்ச்சி
   ஈ) மேற்கூறிய அனைத்தும்
6. சமநிலை புள்ளியில் :
   (அ) ஒரே விலை நிலவும்
   (ஆ) தேவையும் அளிப்பும் சமம்
   (இ) அப்புள்ளியில் தேவைக்கோடு அளிப்புக் கோட்டை வெட்டும்
   (ஈ) மேற்கூறிய அனைத்தும்
7. உற்பத்தி என்பது :
   (அ) பயன்பாட்டின் அழிவு
   (ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்
   (இ) மாற்று மதிப்பு
   (ஈ) எதுவுமில்லை
8. உண்மைச் செலவு என்பது
   (அ) துன்பம் மற்றும் தியாகமும்
   (ஆ) உள்ளுணர்வு
   (இ) முயற்சியும் தியாகமும்
   (ஈ) மேற்கூறிய அனைத்தும்
9. விற்பனைச் செலவின் மிக முக்கியமான வடிவம் என்பது :
   (அ) விளம்பரங்கள்
   (ஆ) விற்பனை
   (இ) ஒரே மாதிரியான பண்டங்கள்
   (ஈ) எதுவும் இல்லை
10. போலி வாரம் என்ற கருத்தின் ஆசிரியர் :
    அ) ஆடம் ஸ்மித் ஆ) மார்ஷல்
    இ) ரிக்கார்டோ ஈ) சாமுவேல்சன்
11. பேரியல் பொருளியல் சிந்தனையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர் :
    (அ) டேவிட் ரிகார்டோ (ஆ) J.M. கீன்சு
    (இ) ஆடம் ஸ்மித் (ஈ) மால்தஸ்
12. பேரியல் பொருளாதாரத்தில் மையப் பிரச்சினை :
    அ) வருமானமும் வேலை வாய்ப்பும்
    ஆ) விலையும் வெளியீடும்
    இ) வட்டியும் பணமும்
    ஈ) ஏதுமில்லை
13. பொதுமக்களிடம் உள்ள புழக்கப்பணம் என்பது :
    அ) M_1 ஆ) M_2
    இ) M_3 ஈ) M_4
14. பூஜிய நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு _____ ஆண்டாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
    (அ) அடிப்படையானது
    (ஆ) நிதியாண்டு
    (இ) புதிய ஆண்டு
    (ஈ) கல்வியாண்டு

SURA BOOKS

II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 12 × 1 = 12

15. பொருளாதாரம் என்பது _____ அறிவியலாகும்.
16. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு _____ எனவும் அழைக்கப்படுகிறது.
17. _____ என்பது பண்டங்களை, பணிகளை பயன்படுத்துவதாகும்.
18. சமுதாய அந்தஸ்துக்காக தேவைப்படும் பண்டங்கள் _____ விளைவாகும்.
19. நவீன பொருளியல் வல்லுநர் காலத்தை _____ மற்றும் _____ பிரித்தனர்.
20. நாடுகளின் செல்வமும் அதை உருவாக்குகின்ற காரணிகளைப் பற்றிய ஆய்வு என்ற நூலை எழுதியவர் _____ .
21. மொத்த செலவு என்பது _____.
22. சில்லோர் முற்றுரிமை அங்காடியில் உள்ள நிறுவனங்கள் தங்களுக்குள்ளே முக்கியமான _____ செயல்பட வேண்டியதை உணர்ந்திருக்கும்.
23. பணக்கூலி என்பது _____ கூலி என்றும் அழைக்கலாம்.
24. ஆரம்ப முதலீட்டினால் வருமானத்தில் ஏற்படும் விரிவாக்கத்தின் விளைவு _____ விளைவு ஆகும்.
25. பணவாட்டம் என்பது விலைகள் _____ குறிக்கும்.
26. நேரடி மற்றும் மறைமுக வரிவிதிப்புமுறை _____ அடிப்படையாக கொண்டு விதிக்கப்படுகிறது.

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக. 12 × 1 = 12

27.	பலிஸ்	(அ) வாக்கர்
28.	வாய்ப்புச் செலவு	(ஆ) கம்பு, கேழ்வரகு
29.	பொருளாதாரக் கோட்பாடுகள்	(இ) திட்ட வளை கோடு
30.	கிஃபன் முரன்பாடு	(ஈ) D > S
31.	மிகைத் தேவை	(உ) தங்கம் மற்றும் வெள்ளி
32.	a + b > 1	(ஊ) அரசு
33.	நீண்டகால சராசரி செலவு வளைகோடு	(எ) C + S
34.	உலக அங்காடி	(ஏ) வளர்ந்து செல்விகித விளைவு விதி
35.	எச்ச உரிமை கூலிக் கோட்பாடு	(ஐ) வட்டி வீதம்
36.	Y	(ஒ) வருவாயும் செலவும் சமமாக இருக்கும்
37.	கடன் அளவு கடன் கட்டுப்பாடு	(ஓ) அடுத்த சிறந்த மாறுபட்ட பண்டத்தை கொடுத்தல்
38.	சமச்சீர் நிதிநிலை அறிக்கை	(ஔ) மார்ஷல்

IV. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக. 12 × 1 = 12

39. எக்னாமெட்ரிக்ஸ் எனப்படுவது எந்தெந்த பாடங்களை உள்ளடக்கியது?
40. பழமைப் பொருளாதாரம் ஓர் தன்னிறைவுப் பொருளாதாரமா?
41. சம–இறுதிநிலைப் பயன்பாட்டிற்கு, வேறு பெயர் என்ன?
42. புள்ளி முறையின் வாய்ப்பாடுகள் என்ன?
43. காலத்தின் பங்கினை அறிமுகப்படுத்தியவர் யார்?
44. சமஅளவு உற்பத்திக் கோட்டிற்கு வேறு பெயர் யாது?
45. சமமுறிவுப் புள்ளி என்றால் என்ன?
46. MRTP சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
47. ரிக்கார்டோவின் கூற்றுப்படி எல்லா நிலங்களும் வளம் பெறுகின்றனவா?
48. பெருக்கியின் வாய்பாட்டை எழுதுக.
49. M_1ன் மற்றொரு பெயர் என்ன?
50. வரவு செலவு திட்டத்தின் முக்கிய வகைகளை கூறுக.

பகுதி – ஆ

V. குறிப்பு : i) **எவையேனும் பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். **10 × 3 = 30**

ii) ஒவ்வொரு விடையும் **நான்கு** அல்லது **ஐந்து** வரிகளில் அமைந்திட வேண்டும்.

51. இலவசப் பண்டங்கள் மற்றும் பொருளாதாரப் பண்டங்களை வேறுபடுத்துக?
52. பொதுவுடைமையின் அடிப்படைச் சிறப்பம்சங்களை கூறுக.
53. இந்திய பொருளாதாரம் கலப்பு பொருளாதாரமா? விவரி.
54. சமநோக்கு வளைக்கோட்டின் பண்புகள் யாவை?
55. தேவை என்பது என்ன?
56. நீண்டகாலம், குறுகிய காலம் வேறுபடுத்துக.
57. அங்காடிக் காலம் சிறுகுறிப்பு வரைக.
58. உழைப்பு என்றால் என்ன?
59. உற்பத்தி சார்பு என்றால் என்ன? வகைப்படுத்துக.

SURA BOOKS

60. வாய்ப்புச் செலவு என்றால் என்ன?
61. இறுதிநிலைச் செலவு என்றால் என்ன?
62. வாழ்க்கை தர கூலி கோட்பாடு என்பது யாது?
63. உறுதித் தேவை என்றால் என்ன?
64. பணத்தின் இலக்கணத்தை கூறுக.
65. பொது நிதியின் பாடப்பொருள் (Subject matter) என்ன?

பகுதி – இ

VI. குறிப்பு : i) **எவையேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **6×10=60**

ii) ஒவ்வொரு விடையும் **ஒரு பக்க** அளவில் அமைந்திட வேண்டும்.

66. முதலாளித்துவத்தின் சிறப்பு பண்புகளை விளக்குக?
67. தேவைக்கோடு இடம் பெயர்தலை வரைபடத்துடன் விளக்குக.
68. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?.
69. நீண்டகால சராசரி செலவு வளைகோடு பற்றி குறிப்பு வரைக.
70. SAC மற்றும் SMC–க்கும் உள்ள உறவினை கூறுக.
71. முற்றுரிமையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை?
72. சேயின் அங்காடி விதியின் குறைபாடுகளைக் கூறுக.
73. கீன்சின் வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டின் எடுகோள்களை விளக்குக.
74. வரிவிதிப்புக் கொள்கையை விவரி.
75. ஆண்டு நிதிநிலை அறிக்கை என்பதை விளக்குக: சமநிலை மற்றும் சமநிலையற்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவரிக்கவும்?

பகுதி – ஈ

3 × 20 = 60

VII. குறிப்பு : i) **எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் **மூன்று பக்க** அளவில் அமைந்திட வேண்டும்.

76. பொருளாதாரமும் பிற சமூக இயல்களுடன் உள்ள தொடர்பினை விவாதிக்கவும்?
77. குறைந்து செல் பயன்பாட்டு விதியினை படம் வரைந்து விளக்கம் தருக.
78. தேவை விதியினை விவரமாக எழுதுக.
79. முற்றுரிமை போட்டியில் விலை, பண்டங்கள் தீர்மானிக்கப்படுவது எவ்வாறு என்பதை விளக்குக.
80. கீன்ஸின் வட்டிக் கோட்பாட்டினை விவரிக்கவும்?
81. பணக்கொள்கையின் நோக்கம் மற்றும் கருவிகளை விவாதிக்கவும்.

❁❁❁❁

பகுதி – அ

I. 1. (அ) 2. (அ) 3. (ஆ) 4. (அ)
5. (இ) 6. (ஈ) 7. (ஆ) 8. (ஈ)
9. (அ) 10. (ஆ) 11. (ஆ) 12. (அ)
13. (அ) 14. (இ)

II. 15. சமூக
16. உற்பத்தி வாய்ப்பு எல்லை கோடு
17. நுகர்வு
18. வெப்ளன்
19. குறுகியகாலம் மற்றும் நீண்ட காலம்
20. ஆடம் ஸ்மித்
21. மொத்த மாறாச் செலவு + மொத்த மாறும் செலவு
22. ஒற்றுமையுடன் கூட்டுறவாக
23. பெயரளவு
24. பெருக்கி
25. வீழ்ச்சி
26. நிகழ்வு மாற்றம்

III. 27. (ஊ) 28. (ஒ) 29. (ஔ) 30. (ஆ)
31. (ஈ) 32. (ஏ) 33. (இ) 34. (உ)
35. (அ) 36. (எ) 37. (ஐ) 38. (ஒ)

IV. 39. புள்ளியியல், கணக்கு, பொருளியல்
40. ஆம்
41. காஸன் இரண்டாம் விதி.
42. தேவைக்கோட்டின் கீழ்பகுதி / தேவைக்கோட்டின் மேல் பகுதி
43. ஆல்ஃபிரடு மார்ஷல்
44. சம உற்பத்திக் கோடுகள்
45. இலாபமும், நஷ்டமும் இல்லா நிலைப்புள்ளி
46. 1969
47. இல்லை.
48. $K = \frac{\Delta Y}{\Delta I}$ (or) $K = \frac{1}{1 - MPC}$ (or) $K = \frac{1}{MPS}$
49. குறுகிய பணம்
50. சமநிலை வரவு, சமனற்ற வரவு செலவுதிட்டம்

SURA BOOKS

பகுதி – ஆ

51.

வ. எண்	இலவச பண்டங்கள்	பொருளாதார பண்டங்கள்
1.	இயற்கையின் நன்கொடை	பணம் கொடுத்து பெறுவது
2.	பற்றாக்குறையற்றவை	பற்றாக்குறையானவை
3.	சந்தையில் விலை பெறுவதில்லை	சந்தையில் விலை உண்டு
4.	(எ.கா.) காற்று, சூரிய ஒளி	எ.கா. மேசை, நாற்காலி

52. 1. சமுக நலன்.
2. தனியார் சொத்துரிமையின்மை.
3. மையத்திட்டம்.
4. அங்காடிச் சக்திகள் இல்லை.

53. 1. ஆம், இந்தியா ஒரு கலப்புப் பொருளாதாரம் ஆகும்.
2. அரசு (பொது) துறையும், தனியார் துறையும் சேர்ந்து செயல்படுகின்றன.
3. அரசு (பொது) மற்றும் தனியார் நிறுவனங்கள் பொருளாதார கட்டுப்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.
4. என்ன உற்பத்தி செய்வது? எப்படி? யாருக்காக? என்ற அனைத்து முடிவுகளும் அரசே மேற்கொள்கிறது.

54. 1. எல்லா சமநோக்கு வளைக்கோடுகளும் வலப்புறமாக, கீழ்நோக்கிச் செல்லும்.
2. சமநோக்கு வளைகோடுகள் குவிந்த நிலையில் அமையும்.
3. இரண்டு சமநோக்கு வளைக்கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.

55. ♦ தேவை என்பது அப்பொருளை வாங்குவதற்கான விருப்பத்தையும் போதிய வாங்கும் சக்தியையும், வாங்கிவிட வேண்டும் என்கின்ற முடிவையும் குறிக்கும்.
♦ வறுமைக்கோட்டிற்கு கீழ் இருக்கும் ஒரு எளிய நபர் 'கார்' ஒன்றை வாங்க வேண்டும் என்பது வெறும் விருப்பமே. ஆனால் பணக்காரர் ஒருவர் தனக்கு கார் வாங்க வேண்டும் என்று விரும்பும்போது அது தேவை என கருதப்படும்.
♦ விருப்பத்தோடு கூடிய வாங்கும் சக்தியே 'தேவை' என்று அழைக்கப்படுகிறது.

56.

நீண்ட காலம்	குறுகிய காலம்
♦ அனைத்து காரணிகளும் மாறும்.	♦ ஏதேனும் ஒரு உற்பத்தி காரணிகள் மட்டும் மாறும். மற்ற காரணிகள் மாறாது.
♦ அளிப்பு அதிக நெகிழ்ச்சி உடையது.	♦ அளிப்பு நெகிழ்ச்சி அற்றது.
♦ விலை தீர்மானிப்பதில் அளிப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.	♦ விலை தீர்மானிப்பதில் தேவை முக்கிய பங்கு வகிக்கிறது.

57. ♦ அங்காடிக் காலம் மிக குறுகிய காலம் என்று அழைக்கப்படுகிறது.
♦ அளிப்பு நிலையானது.
♦ மிக குறுகிய காலம் என்பது ஒரு மணி நேரம், ஒரு நாள் மற்றும் ஒரு மாதத்தை குறிக்கும்.
♦ அழுகும் பண்டங்களான பூ, காய், கனி போன்றவை அங்காடிக் காலத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்

58. உற்பத்திப் பாதையில் உழைப்பு என்பது மனித இடுபொருள் ஆகும். "ஒரு பணியை ஒருவர் செய்திடுவதால், அவருக்குக் கிடைக்கும் மனநிறைவோடு மட்டுமின்றி அதனை செய்வதற்காக கைமாறு எதிர்பார்த்து மனிதன் தன் உடல் அல்லது அறிவை முழுமையாகவோ, பகுதியாகவோ பயன்படுத்தி மேற்கொள்ளும் கடும் முயற்சியே உழைப்பாகும்" என ஆல்ஃபிரடு மார்ஷல் கூறுகிறார்.

59. ♦ உற்பத்திச் சார்பு என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பாகும். உள்ளீடு என்பது உற்பத்திக்குப் பயன்படும் நிலம், உழைப்பு, மூலதனம் தொழிலமைப்பு ஆகிய ஆக்கப் பணிகளாகும்.
♦ உற்பத்திச் சார்பு என்பதை இருவகைகளாகப் பிரிக்கலாம்.
1. குறுகிய கால உற்பத்திச் சார்பு
2. நீண்ட கால உற்பத்திச் சார்பு

60. (i) ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேர்ந்தெடுக்கப்படுவதால், அதனுடைய அடுத்த சிறந்த பயன்பாடு விட்டுக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

(ii) எடுத்துக்காட்டாக கோதுமையை பயிரிடும் உழவர் தன்னிடமுள்ள அதே உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி உருளைக்கிழங்கை சாகுபடி செய்யலாம். ஒரு குவின்டால் கோதுமையின் பிறவாய்ப்புச் செலவுயாதெனில் விட்டுத்தந்த உருளைக்கிழங்கின் உற்பத்தி அளவேயாகும்.

SURA BOOKS

61. 1. ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால் மொத்த செலவில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதிநிலை செலவு என்று வரையரை செய்யப்படுகின்றது.

2. எடுத்துக்காட்டாக ஒரு நிறுவனம் 100 அலகுகள் உற்பத்தி செய்கிறது.

3. அந்நிறுவனம் 99 அலகுகளை உற்பத்தி செய்ய ரூ.9000 மொத்த செலவாகிறது என்று வைத்துக் கொண்டால், 100 அலகுகள் உற்பத்தியை செய்ய ரூ.10,000 செலவாகும் போது, (10000 – 9000) = ரூ.1000/– இறுதிநிலை செலவாகும்.

4. இறுதிநிலைச் செலவு 'U' வடிவத்தில் இருக்கும்.

$$MCn = TCn - TC_{n-1}$$

62. வாழ்க்கைத் தரக் கூலிக்கோட்பாடு என்பது தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாக கொண்டது என்று கூறுகின்றது.

63. உறுதித் தேவை என்பது வாங்கும் திறன் மற்றும் செலவழித்தலின் நாட்டம் கொண்ட தனிமனிதர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் பற்றியதாகும். பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும் அளவும் அதன் காரணமாக தோன்றக்கூடிய வேலை வாய்ப்பும் சமுதாயத்தின் மொத்த செலவிடும் திறனைச் சார்ந்து உள்ளன எனக் குறிப்பிடலாம்.

64. பேராசிரியர் வாக்கர் (walker) பணம் என்பது "எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே பணம்" என்று கூறுகிறார். எவற்றால் பல பணிகளை செய்ய முடிகிறதோ அதுவே பணம் என தற்கால பொருளாதாரம் கூறுகிறது. நாணயங்கள், ரூபாய் நோட்டுகள், காசோலைகள், உண்டியல்கள், கடன் அட்டைகள் முதலியன பணத்துள் அடங்கும்.

65. பொதுநிதியின் உள்ளடக்கங்கள் பின்வருமாறு.

1. பொதுச் செலவு
2. பொது வருவாய்
3. பொதுக் கடன்
4. நிதி நிருவாகம்
5. கூட்டாட்சி முறை (மத்திய மாநில உறவுகள்)

பகுதி – இ

66. **அங்காடிப் பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள் :**

(அ) தனியார் சொத்துரிமை :

(i) தனி நபர்கள் சொத்து வாங்கவும், சொந்தமாக்கிக் கொள்ளவும் உரிமை உண்டு.

(ii) அங்காடி பொருளாதாரத்தில் வரையறையின்றி எவ்வளவு சொத்துக்களை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்.

(iii) சொத்தை சுட்டப்பூர்வமாக அவர்கள் விரும்புகின்ற வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(ஆ) இலாப நோக்கம் :

(i) இலாப நோக்கு மட்டுமே அங்காடிப்பொருளாதாரத்தின் முக்கியச் செயல்பாடாகும்.

(ii) பெருமளவு இலாபங்களைத் திரட்ட வேண்டுமென்பதால் தனி மனிதன் அதிக இடர்பாடுகளை மேற்கொண்டு உற்பத்தி முடிவுகளை மேற்கொள்வான்.

(iii) 'இலாபநோக்கமே' அங்காடிப் பொருளாதாரத்தின் முக்கியச் சக்தியாக செயல்படுகிறது.

(இ) தெரிவு மேற்கொள்ளும் சுதந்திரம் :

(i) என்ன பொருளை உற்பத்தி செய்வது என்பதை உற்பத்தியாளரே மேற்கொள்கிறார்.

(ii) மேலும் தீர்மானிப்பதில் சுதந்திரம் பெற்றுள்ளார்.

(iii) தங்கள் பணிகளுக்கான தகுந்த விலையை தீர்மானித்துக் கொள்ள உற்பத்திக் காரணிகளை சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் பணியமர்த்திக் கொள்ளலாம்.

(iv) நுகர்வோரும் தனது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முழு சுதந்திரம் பெற்றுள்ளார்.

(ஈ) அங்காடிச் சக்திகள் :

(i) அங்காடிச் சக்திகளான தேவை, அளிப்பு மற்றும் விலை ஆகியவை, இம்முறையை நெறிப்படுத்தும் குறியீடுகள் ஆகும்.

(ii) பெருவாரியான பொருளாதார செயல்பாடுகள் விலையியக்கத்தால் அமைந்ததாகும்.

(உ) அரசின் குறைந்தபட்ச செயல்பாடு :

(i) பெருவாரியான பொருளாதாரப் பிரச்சனைகள் அங்காடிச் சக்திகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

(ii) குறைந்தபட்ச அளவாக அரசின் பங்கானது சில முக்கியமான பணிகளைச் செய்யவே வரையறுக்கப்பட்டுள்ளது. (எ.கா.) அங்காடியை ஒழுங்குபடுத்துதல், பாதுகாப்பு, அயல் நாட்டுக் கொள்கை, பணம் போன்றவைகள் ஆகும்.

67. ♦ தேவையை பாதிக்கும் மற்ற காரணிகளை தேவையைத் தீர்மானிக்கும் காரணிகள் என்றும் கூறலாம்.

♦ பிற காரணிகளான நுகர்வோரின் வருமானம், சுவை, விருப்பம், பதிலீட்டுப் பண்டங்களின் விலைகள் போன்றவை மாறும்பொழுது தேவைக்கோடு இடம் பெயரும்.

SURA BOOKS

- நுகர்வோரின் வருமானம் அதிகரித்தால், விலை குறைந்தாலும், கூடினாலும் நுகர்வோர் அதிக அளவு பண்டங்களை வாங்குவார்கள். அதே போல விலைமாற்றம் இல்லாவிட்டாலும், வருமானம் குறையும்போது தேவையும் குறையும்.



விளக்கம்

- X - அச்சு பண்டத்தின் தேவையின் அளவையும், Y - அச்சு விலையையும் குறிக்கும்.
- DD- என்பது தேவைக்கோடு.
- SS - என்பது அளிப்புக் கோடு.
- E - என்பது சமநிலைப்புள்ளி.
- நுகர்வோரின் வருமானம் குறையும்பொழுது தேவைக் கோடு DDயிலிருந்து D_1D_1க்கு குறைகிறது. இது புதிய சமநிலையை E-ல் இருந்து E_1- க்கு மாற்றுகிறது.
- பிறகாரணிகள் மாறும்பொழுது புதிய தேவைகோடு மேலும் கீழுமாக நகர்ந்து செல்கிறது.
- அதே போல நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும் பொழுது தேவைகோடு D_1D_1யிலிருந்து D_2D_2க்கு இடம் பெயராகிறது.

68. **1. இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் கண்டு தேர்ந்தெடுத்தல் :**

- தொழில் முனைவோரின் முதன்மைப் பணியானது அங்காடியில் நிலவிடும் புதிய கருத்துக்களையும், சவால்களையும் ஏற்று இலாபகரமாகப் பயன்படுத்திக் கொள்வது எவ்வாறு? என்பதை ஆராய்வதாகும்.

2. உற்பத்தி அலகின் அளவைத் தீர்மானித்தல் :

- ஒரு தொழில் முனைவோன் உற்பத்தி அலகின் அளவை தீர்மானிக்கிறார் – சந்தையில் போட்டியின் அளவைப்பொருத்தும், உற்பத்தியின் இயல்பைப் பொருத்தும் பெரியதாகவோ சிறியதாகவோ உள்ளதாக தீர்மானிப்பார்.

3. உற்பத்தி அலகின் இடத்தைத் தேர்ந்தெடுத்தல் :

- ஒரு சிறந்த தொழில் முனைவோர் தனது உற்பத்தி செய்யும் இடத்தை காரணிச் சந்தைக்கும், இறுதி நிலை சந்தைக்கும் அருகிலேயே தேர்ந்தெடுப்பார்.
- இதன் மூலம் போக்குவரத்துச் செலவைக் குறைக்க முடியும்.

4. உற்பத்திக் காரணிகளின் உத்தம ஒருங்கிணைப்பைக் கண்டறிதல்

- ஒரு புது தொழிலைத் தொடங்கத் தீர்மானித்த நிலையில், அவர் உற்பத்திக் காரணிகளை உற்பத்தியில் ஈடுபடுத்தும் பணியினை தொடங்குகிறார்.
- இக்காரணிகளை எந்தவிகிதத்தில் இணைத்து குறைந்த செலவில் அதிக உற்பத்தியைப் பெற இயலும் என தீர்மானிக்கிறார்.

5. புத்தாக்கப்பணி :

- புது அங்காடிகளைக் கண்டறிதலும், புது தொழில் நுட்பங்களைக் கையாள்வதுமே தொழில் முனைவோரின் புத்தாக்கப் பணி என பேராசிரியர் ஷூம்பீட்டர் கூறுகிறார்.
- ஒரு புது அங்காடி விற்பனை அளவைக் கூட்டுவதோடு, புதிய உற்பத்தி செலவைக் குறைக்கும் யுக்தி, பொருளை மலிவாகக் கிடைக்கச் செய்யும்.

6. வெகுமதிச் செலவைத் தீர்மானித்தல் :

- உற்பத்திக்குப் பயன்படும் காரணிகளாவது அதன் உற்பத்திக்கு ஏற்ப வெகுமதியைப் பெறுகிறது.
- உற்பத்திக் காரணிகளின் உற்பத்தியை அளவிடுதலும் மற்றும் அதன் வெகுமதியளிப்பும் தொழில் முயல்வோரின் தீர்வுக்குரிய பணியாகும்.

7. இடர்ப்பாடுகளை ஏற்றல், நிச்சயமின்மையை எதிர்கொள்ளல் :

- 'வாணிபம்' என்பது இடர்ப்பாடுகளின் கூட்டு என்கிறார் ஹாலே.
- இடர்ப்பாடுகளை ஏற்கும்ஒருவர் வெற்றிகரமான "தொழில் முனைவோர்" ஆவார்.
- நைட் என்ற அறிஞரின் கூற்றுப்படி, 'வாணிபத்தில் உறுதியற்ற தன்மைகளை பொறுத்துக் கொள்ளல் ஒரு தொழில் முயல்வோரின் தலையாய பணி' என்கிறார்.

69. (i) நீண்ட காலத்தில் அனைத்துக் காரணிகளும் மாறாக்கூடியவை.

(ii) தேவையின் மாற்றத்திற்கேற்ப, மூலதனக் கருவிகள் மற்றும் இயந்திரங்களின் அளவை அந்நிறுவனம் மாற்றிக் கொள்ளக்கூடும்.

SURA BOOKS

(iii) நீண்டகால சராசரி செலவு வளைகோடு– வெளியிடு உற்பத்திக்கும், நீண்டகால உற்பத்தி செலவிற்குமிடையே உள்ள தொடர்பினை விளக்குகிறது.

(iv) ஒவ்வொரு உற்பத்தி அளவிற்கும் அல்லது நிறுவனத்தின் அளவிற்கும், அந்நிறுவனத்திற்கே உரித்தான குறுகிய கால சராசரி செலவு வளைகோட்டை (SAC) கொண்டுள்ளது.

(v) தொழில் நுட்பரீதியில் மூன்று அளவிலான, சிறிய, நடுத்தர, மற்றும் பெரிய நிறுவனங்கள் இருப்பதாக நாம் எடுத்துக்கொள்வோம்.

(vi) SAC_1,என்பது சிறிய அளவிலான நிறுவனத்திற்கும், SAC_2 நடுத்தர அளவான நிறுவனத்திற்கும், SAC_3 பெரிய அளவான நிறுவனத்திற்கும் பொருந்தும்.





(vii) குறுகிய காலத்தில், தேவைப்படும் உற்பத்தி OA ஆக இருக்கும்பொழுது, அந்நிறுவனம், குறுகிய அளவிலான உற்பத்தியை தெரிவு செய்யும்.

(viii) உற்பத்தி அளவு OB யை காட்டிலும் அதிக அளவாக இருக்கும் பொழுது அந்நிறுவனம் நடுத்தர உற்பத்தியை தெரிவு செய்து, சராசரி செலவானது குறுகியகால அளவைவிட அதிகமாக இருக்கும்.

(viii) அதே அளவான வெளியீட்டிற்கு OD யைக் காட்டிலும் அதிக அளவு உற்பத்தி செய்வதற்கு அந்நிறுவனமானது, பெருமளவு உற்பத்தியை தெரிவு செய்யும்.

(ix) SAC_3 குறுகிய காலத்தில் நிறுவனமானது கொடுக்கப்பட்ட ஒரு தொழிலோடு இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் நீண்டகாலத்தில் அந்நிறுவனம் ஒரு தொழிற்சாலையிலிருந்து மற்றொன்றிற்கு மாறுகிறது.

(xi) நீண்டகால சராசரிச் செலவு வளைகோடு திட்ட வளைகோடு என்றும் உறைவடிவ வளைகோடு என்றும் பல குறுகிய கால சராசரி செலவு வளைகோடு என்றும் அழைக்கப்படுகிறது.

(xii) நீண்டகால சராசரி வளைகோடு முதலில் ஒவ்வொரு அலகு அதிக உற்பத்தியுடன் குறைந்து ஒரு குறிப்பிட்ட புள்ளிக்குப் பிறகு அதிகரித்து ஒரு படகு வடிவ வளைகோட்டை ஏற்படுத்துகிறது.

70. குறுகியக்கால சராசரி வளைகோட்டிற்கும் குறுகியக்கால இறுதி நிலை செலவு வளைகோட்டிற்கும் இடையே உள்ள தொடர்பு :

◆ இவைகளுக்கிடையே உள்ள தொடர்பு கணித ரீதியில் விளக்குதல் எளிதாக அமைந்துள்ளது.



இவற்றின் தொடர்பினைக் கீழ்கண்டவாறு அளிக்கலாம்

1. இறுதிநிலை செலவு சராசரி செலவைவிட குறைவாக இருக்கும்போது போது, சராசரி செலவு குறைகின்றது.
2. இறுதிநிலை செலவு சராசரி செலவைவிட அதிகமாக இருக்கும்போது, சராசரி செலவு அதிகரிக்கின்றது.
3. இறுதி நிலை செலவு வளைகோடு சராசரி வளைகோட்டின் தாழ்ந்த (குறைந்த) புள்ளியில் கீழிருந்து வெட்ட வேண்டும். இவ்வாறு சராசரி செலவின் (AC) குறைந்த புள்ளியில் MC, ACக்கு சமமாக இருக்கும்.

71. முற்றுரிமையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:

(i) **சட்டம் இயற்றுதல் :**

◆ முற்றுரிமையைக் கட்டுபடுத்த அரசு சட்டங்களை இயற்றலாம்.

◆ முற்றுரிமை தவிர்ப்பு சட்டங்கள் இயற்றப்பட்டு முற்றுரிமையின் வளர்ச்சியைக்

SURA BOOKS

கட்டுப்படுத்தலாம் இந்தியாவில் 1969–ல் (MRTP) என்ற வணிகச் சட்டம் இயற்றப்பட்டது.

- இச்சட்டத்தினால் முற்றுரிமை சக்திகள் ஒரு சிலரிடம் குவிவதை தடுக்கப்படுகின்றது.

(ii) **விலை, உற்பத்தியளவு கட்டுப்படுத்துதல் :**

- இயற்கை முற்றுரிமைகளை முறியடிக்க இந்த முறை கையாளப்படுகிறது.
- விலையையோ பண்ட அளவையையோ அல்லது இரண்டையுமே அரசே முடிவு செய்யும்.

(iii) **வரி விதித்தல் :**

- முற்றுரிமையின் சக்தியை குறைப்பதற்கோ, தடுப்பதற்கோ வரி விதித்தாலும் கூட ஒரு கட்டுப்படுத்தும் முறையாகும்.
- முற்றுரிமையாளர் மீது அரசு கணிசமான தொகையை வரியாக விதிக்கலாம்.
- வரி விதித்தல் விளைவாக இலாபம் குறைந்து அதன் பொருளாதார வலிமை குறையும்.

(iv) **நாட்டுடைமையாக்குதல் :**

- பெரிய முற்றுரிமை நிறுவனங்கள் நாட்டுடைமையாக்குவதால், நுகர்வோரை சுரண்டி வாழும் நிறுவனங்களை அரசே ஏற்று நடத்தலாம்.

(v) **நுகர்வோர் சங்கங்கள் :**

- நுகர்வோர் சங்கங்களை அமைக்க ஊக்குவிப்பதன் வாயிலாக நுகர்வோரது பேரசக்தியை அதிகப்படுத்தி அவரது உரிமையை பாதுகாத்து முற்றுரிமை வளர்ச்சியை கட்டுபடுத்தலாம்.

72. 'சே' விதியின் முக்கியக் குறைபாடுகளாவன :

(i) உலகப் பெருமந்தத்தினால் 'சே' விதியின் புகழ் மங்கிப் போனது.

(ii) ஈட்டிய வருமானம் அனைத்தும் எப்போதும் நுகர்விற்கே செலவிடப்படுவதில்லை.

(iii) இது போலவே, சேமிப்பு அனைத்தும் முதலீடு செய்யப்படுவதில்லை.

(iv) இவ்விதி அங்காடி பற்றிய தவறான ஆய்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(v) 'ஒட்டுமொத்தம்' என்ற தவறான கருத்தால் இது பாதிக்கப்படுகிறது.

(vi) ஒட்டு மொத்த அளிப்பும், ஒட்டு மொத்தத் தேவையும் எப்போதும் சமமாக இருப்பதில்லை.

(vii) வட்டிவீதம் சமப்படுத்தும் காரணியல்ல.

(viii) முதலாளித்துவ முறை எப்போதும் தன்னைத்தானே சரிசெய்து கொள்ளாது.

(ix) 'நிறைவுப் போட்டி' என்பது உண்மையற்ற எடுகோள் ஆகும்.

(x) பொருளாதாரத்தில் 'பணம்' ஒரு முக்கியச் 'சக்தி'யாகும்.

(xi) இவ்விதி நீண்ட காலத்திற்கு மட்டுமே பொருந்தும்.

(xii) 'பண்ட மாற்றுப்' பொருளாதாரத்திற்கு மட்டுமே 'சே' விதி பொருந்தும்.

73. வருமான நிர்ணயத்தை விளக்க கீழ்காணும் எடுக்கோள்களை கீன்ஸ் பயன்படுத்துகிறார்.

எடுகோள்கள் :

(i) இரு பிரிவினரே உள்ளனர். நுகர்வோர் (C) மற்றும் நிறுவனங்கள் (I)

(ii) பொருளாதாரத்தில் அரசின் துண்டுதல் ஏதும் இல்லை (G) வேறு வகையில் சொல்வதனால் அரசின் செலவு 'பூஜ்ஜியம்' ஆகும் வரிகள் ஏதும் இல்லாததால் தனி நபர் வருமானம் அனைத்தும் செலவிடக் கூடிய வருமானமேயாகும்.

(iii) பொருளாதாரம் மூடப்பட்ட பொருளாதாரம் ஆகும். அயல்நாட்டு வாணிபத்தில் தூண்டுதல் எதும் இல்லை. அதாவது X-M பூஜ்ஜியம் ஆகும்.

(iv) கூலி மற்றும் விலையில் மாற்றம் ஏதும் இல்லை (நிலையாக இருக்கும்)

(v) வேலைக்கு அமர்த்தப்படாத வளங்கள் இருப்பதால் முழு வேலை வாய்ப்பு நிலையை விட குறைவான நிலையே நிலவுகிறது.

(v) வட்டி வீதத்தில எவ்விதமான மாற்றமும் இல்லை.

(vi) 'முதலீடு' தன்னிச்சையானது, எனவே விலை மட்டத்தைப் பொருத்தோ வட்டி வீதத்தைப் பொருத்தோ அது அமைவதில்லை.

(vii) நுகர்வு செலவு ஒரே நிலையானது. முதல் மூன்று எடுக்கோள்களின் காரணமாக அடிப்படை சமன்பாடு $Y = C + I + G + (X - M)$ என்ற சமன் சுருக்கப்பட்டு $Y = C+1$ ஆகிறது.

74. வரி விதிப்பின் விதிகள் :

ஆடம் ஸ்மித்தின் வரிவிதிப்புக் கொள்கைகள் பின்வருமாறு :

1. சமத்துவ விதி, 2. தெளிவு விதி,
3. வசதி விதி, 4. சிக்கன விதி.

1. **சமத்துவ விதி :** இவ்விதியின்படி 'ஒருவன் தன் சக்திக்கேற்ப' வரி செலுத்துவதே இதனுடைய கொள்கையாகும். வரி விதிக்கும் போது வரி செலுத்துவோரின், சக்திக்கேற்ப வரி விதிக்க வேண்டும். ஏழைகள் மீது குறைவாகவும், பணக்காரர்கள் மீது அதிகமாகவும் வரி விதித்தல் வேண்டும். வரி விதிப்பானது நீதியின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அனைத்து தரப்பு மக்களும் தங்களது சக்திக்கேற்ப வரி செலுத்த வேண்டும்.

SURA BOOKS

2. **தெளிவு விதி / உறுதி விதி :** ஒவ்வொரு குடிமகனும் தான் செலுத்த வேண்டிய வரியின் அளவு, எப்பொழுது வரி செலுத்த வேண்டும், யாரிடம் செலுத்த வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும் இதுவே தெளிவு / உறுதி வரியாகும்.
3. **வசதி விதி :** வரி செலுத்துதல், வரி செலுத்துவோருக்கு வசதியாகவும் பாரம் குறைந்ததாயும் இருத்தல் வேண்டும். (எ.கா.) சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி பண்டங்கள் மீதான வரிகள் பொருட்களை வாங்கும்போதே பெறப்படுதல் (உ.ம்) அறுவடையோடு பெறப்படும் நிலவரி.
4. **சிக்கன விதி :** இவ்விதி வரி விதிப்பிலும், வரி வசூலிப்பதும் அதிக பணம் விரயமாகாமலிருக்க வேண்டும் என்ற தத்துவத்தைப் பற்றியது. இச்சிக்கன விதி வரிச்சட்டங்கள் மற்றும் வழி முறைகள் எளிதானதாகவும், மக்களது வருமான வரிகளை குறைந்த அளவில் பயன்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும்.

75. **(அ) ஆண்டு நிதிநிலை அறிக்கை :**

ஆண்டு வரவு செலவு திட்டம் என்பது ஆண்டு நிதிநிலை அறிக்கையாகும். இது அரசின் வரவு–செலவுகளோடு கூடிய ஒரு நிதியாண்டிற்க்கான ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய அறிக்கை இந்த அறிக்கையில் அரசின் நிதிக்கொள்கைகள், வரிக்கொள்கைகள், மூலதன பிறப்பிடங்கள் சேமிப்பு அளவுகள், வளங்களின் பயன்பாடுகள் மற்றும் மூலதன ஆக்கங்கள் பற்றிய விளக்கங்கள் இடம் பெறும்.

(ஆ) வரவு செலவு திட்டம் வரையறை :

பேராசிரியர் டிமாக் அவர்கள் வரவு–செலவு திட்ட வரையறை பற்றி குறிப்பிடும் போது வரவு–செலவு திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சமமாக கணக்கிட்ட வரவு மற்றும் செலவு என்கிறார். மேலும் வரவு செலவு திட்டம் பொறுத்தவரையில் முந்தைய செயல் பாட்டினை பதிவு செய்தல் நிகழ்காலத்தின் கட்டுப்படுத்தும் முறையாகவும் மற்றும் எதிர்காலத்தை பிரதிபலிக்கும் ஒரு திட்டமாகும்.

(இ) வரவு – செலவு திட்டத்தின் வகைகள் :

வரவு – செலவு திட்டம், சமநிலை வரவு செலவு திட்டம் என்றும் சமனற்ற வரவு – செலவு திட்டம் எனவும் இருவகைப்படும்.

(1) சமநிலை வரவு – செலவு திட்டம் : (Balanced Budget)

(i) அரசின் திட்டமிடப்பட்ட செலவுகளும், வருவாயும் சமமாக இருப்பின் அது சமநிலை வரவு–செலவு திட்டம் எனப்படும்.

(ii) ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வருவாயானது செலவிற்கு சமமாய் இருக்கும்.

(2) சமனற்ற வரவு – செலவு திட்டம் : (Un Balanced Budget)

மிகை வரவு செலவுத் திட்டம் (அ) பற்றாக்குறை வரவு செலவு திட்டம்.

(i) சமநிலையற்ற வரவுசெலவுத் திட்டம் என்பது அரசின் வருவாய் செலவைவிடக் கூடினாலும் (அ) அரசின் செலவு வருவாயை விடக் கூடினாலும் இரண்டுமே சமனற்ற வரவு செலவுத் திட்டம் எனப்படும்.

(ii) அரசின் வருவாயும், செலவும் சமமாக இல்லாதிருத்தல்.

(iii) பொது வருவாய், பொது செலவுகளை விட அதிகமாக இருப்பின் அது 'உபரி' வரவு – செலவு திட்டம் எனப்படும்.

(iv) பொதுசெலவைக் காட்டிலும் பொது வருவாய் குறைவாக இருந்தால் அது பற்றாக்குறை வரவு – செலவு திட்டம் எனப்படும்.

தொன்மை பொருளியல் சமநிலை வரவு – செலவு திட்டத்தை அதிகரித்தனர். ஆனால் நவீன பொருளியல் வல்லுநர்கள் சமனற்ற வரவு – செலவு திட்டமே நாட்டின் பொருளாதார சமநிலையை அடையவும் அந்நிலையைத் தொடர்ந்து நிலைநாட்டவும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகின்றன.

பகுதி – ஈ

76. **முன்னுரை :**

பொருளியல், மனித விருப்பங்களை நிறைவு செய்வதைப் பற்றி ஆராயும் ஒரு சமூக அறிவியலாகும். பொருளாதாரம் பிற சமூக அறிவியல்களுடன் தொடர்புள்ளதை இங்கு காண்போம்.

பொருளாதாரமும் பிற சமூக அறிவியல்களும் (Economics to other Social Sciences) பொருளியல்

மற்ற சமூக அறிவியல்களான சமூகவியல், அரசியல், வரலாறு, அறநெறி இயல், நீதிநெறியியல், உளவியல் ஆகியவற்றோடு தொடர்புடையது.

பொருளியலும் சமுதாய இயலும் (Economics and Sociology)

1. அரசியலும் பொருளியலும் சமூக இயலின் பிரிவுகளென கருதப்படலாம்.

SURA BOOKS

2. சமூகவியல் என்பது பொதுவான சமூக அறிவியலாகும். சமூக முழுமைக்கும் சமூதாய விதிகளையும் விபரங்களையும் உருவாக்க முயற்சிக்கிறது.
3. சமுதாயத்தின் அனைத்து பகுதிகளையும் விளக்குகிறது. ஆனால் பொருளியல் சமுதாயத்தின் பொருளியல் பகுதிகளை மட்டுமே விளக்குகிறது. எனவே பொருளியல் சமுதாய இயலின் ஒரு பகுதியாகும்.
4. சமூக இயல் மாணவனுக்கு சமுதாய அமைப்புகளான திருமணம், மதம், அரசியல் நிர்வாகம், பொருளியல் சூழல் முதலியன முக்கியமான பாடப்பகுதிகளாகும். மேலே கூறப்பட்ட இயல்புகள் பொருளியல் வாழ்க்கையை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதைப்பற்றி மட்டுமே நாம் கருத்தில் கொள்கின்றோம்.

பொருளியலும் அரசியலும் : (Economics and Politics)

1. சமூக அறிவியல்களான பொருளியலுக்கும், அரசியலுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு.
2. அரசியல் என்பது நாடு அல்லது சமுதாயம் பற்றிய அறிவியலாகும்.
3. அரசியலில் மனிதனுக்கு உள்ள தொடர்பை பற்றி பயிலுகின்றோம்.
4. தேசிய மயமாக்குதல் (Nationalisation), தனியார் மயமாக்குதல் (Privatization), மதுவிலக்கு (Prohibition) ஆகியவை பொருளியலிலும் அரசியலிலும் மிக முக்கியமான பகுதியாகும்.
5. பொருளியலுக்கும் அரசியலுக்கும் அதிக தொடர்பு இருப்பதால் தொன்மைப்பொருளியல் அறிஞர்கள் இதை 'அரசியல் பொருளாதாரம்' என்றே அழைத்தனர்.
6. காரல் மார்க்ஸ் சமதர்ம பொருளாதாரத்தின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார்.

பொருளியலும் வரலாறும் : (Economics and History)

1. பொருளியல் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையது. வரலாறு கடந்தகால நிகழ்வுகளின் பதிவேடாகும்.
2. கடந்தகால மக்களின் சமூக, பொருளாதார அரசியல் நிலைப்பற்றி கூறுவது வரலாறாகும்.
3. ஒரு வரலாற்று மாணவனுக்கு மொகலாய மன்னர்களின் மதக் கொள்கைகள், அரசின் நிகழ்வுகள் எல்லாம் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.
4. ஒரு பொருளியல் மாணவனுக்கு கடந்த கால மக்களின் வாழ்க்கைத்தரம், வரி விதித்தல் வருவாயைத் திரட்டுதல் போன்றவை முக்கியமாக கருதப்படுகிறது.
5. வரலாறு இல்லாத பொருளியல் வேரற்ற மரம் போன்றது, பொருளியல் இல்லாத வரலாறு கனியற்ற மரம் போன்றது.

பொருளியலும் அறஇயலும் : (Economics and Ethics)

1. அறஇயல் ஒரு சமூக அறிவியல். இது ஒழுக்க நெறிகளைப் பற்றி கூறுகிறது.
2. இது மனிதனது நல்வாழ்கைக்கு எது சரி, எது தவறு என்பதை குறிகோளாக கொண்டுள்ளது.
3. பொருளியல் பிரச்சனைகளை ஆராயும்பொழுது ஒழுக்கநெறி (அல்லது) அறநெறிகளைப் பற்றி கருத்தில் கொள்ள வேண்டியது இல்லை என்று இராபின்சன் கூறுகின்றார். ஆனால் இதை பிற பொருளியல் அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.
4. பொருளியல், அறஇயலின் கைப்பாவை (Handmaid) என்று மார்ஷல் கருதுகின்றார். மனித வாழ்க்கையை மேம்படுத்துவதே பொருளியல் என்று கருதுகின்றார்.

பொருளியலும் சட்ட இயலும் : (Economics and Jurisprudence)

1. சட்ட இயல் என்பது ஒரு சட்ட அறிவியலாகும்.
2. பொருளாதார வளர்ச்சி நாட்டின் சட்டதிட்டங்களைப் பொறுத்து அமையும். நல்ல சட்டங்கள் பொருளாதார வளர்ச்சி வழிவகுக்கும். தவறான சட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும்.
3. பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைய எளிதான தெளிவான வரிவிதிப்பு முறைகளும் தொழிலாளர் நலச் சட்டங்களுக்கு தேவை என்று உணரப்படுகிறது.

பொருளியலும் உளவியலும் : (Economics and Psychology)

1. உளவியல் என்பது மனிதனது மனநிலையை ஆராயும் அறிவியலாகும்.
2. குழந்தைகள் உளவியல், மக்கள் திரன் உளவியல், தொழில் சார்ந்த உளவியல், குற்றவியல் உளவியல் என உளவியல் பல பிரிவுகளை பெற்றுள்ளது.
3. பொருளியல் பிரச்சனைகளை ஆராய உளவியல் பற்றிய அறிவு அவசியமானது.
4. தொழிலாளர் பிரச்சனைகளை ஆராய, தொழில் சார்ந்த உளவியல் அவசியம் ஆகும்.
5. பல முக்கியமான பொருளியல் விதிகள் உளவியல் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. (எ.கா.) குறைந்து செல் இறுதி நிலைப் பயன்பாட்டு விதி.

பொருளியலும் கணிதவியலும் புள்ளியலும் : (Economics, Mathematics and Statistics)

1. பொருளியல் கணிதவியலோடும், புள்ளியலோடும் தொடர்புடையது. புள்ளியியல் என்பது 'சராசரி' பற்றிய 'எண்ணிக்கை' பற்றிய அறிவியலாகும்.

SURA BOOKS

2. பொருளியலில் நாம் பயன்படுத்தும் அட்டவணைகளும் வரைபடங்களும் புள்ளியியலை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
3. கணிதவியல் முறைகள் நவீன பொருளாதாரத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதை நாம் 'அளவியல் பொருளாதாரம்' என்கிறோம்.

77. **முன்னுரை :**

- குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி நுகர்வோரின் சாதாரண அனுபவத்தை விளக்குகிறது.
- நுகர்வோர் மேலும் மேலும் ஒரு பண்டத்தை நுகர்வதால், அதிலிருந்து கிடைக்கும் கூடுதல் பயன்பாடு குறைந்து கொண்டே செல்லும்.
- ஒரு பண்டத்தின் நுகர்வு அதிகரிக்கும் பொழுது இறுதிநிலைப்பயன்பாடு குறைந்து செல்லும் என்று இவ்விதி கூறுகின்றது.
- காசன், பெந்தம், ஜிவான்ஸ், கார்ல்மங்கர் முதலானோர் இக்கருத்து தோன்றுவதற்கு முதல் காரணகர்த்தர் ஆவர்.
- ஆனால் ஆல்பிரட் மார்ஷல் தான் இக்கருத்தை ஒரு விதியாக மாற்றினார்.
- இவ்விதிக்கு காசன்விதி என்றும் பெயர் உண்டு.

இலக்கணம் :

"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" என்று மார்ஷல் இவ்விதியை விளக்குகிறார்.

எடுகோள்கள் :

(i) நுகரப்படும் பண்டத்தின் அளவு ஏற்றுக்கொள்ளத்தக்க தரமான அலகுகளால் அளவிடப்பட்டிருக்கவேண்டும். எ.கா. ஒரு குவளை தேனீர்.
(ii) பண்டத்தின் எல்லா அலகுகளும் ஒத்த தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும்.
(iii) பண்டங்கள் நுகரும் பொழுது கால இடைவெளியின்றி தொடர்ந்து நுகரவேண்டும்.
(iv) சுவைக்கும் பாங்கு, பழக்கவழக்கங்கள் மாறாது நிலையாக இருக்க வேண்டும்.
(v) வருமானம் மாறாமல் நிலையாக இருக்க வேண்டும்.
(vi) நுகரும் பண்டங்கள் மற்றும் அதன் பதலீட்டுப்பண்டங்களின் விலைகள் மாறாது நிலையாக இருக்க வேண்டும்.
(vii) நுகர்வோர் ஒரு இயல்பான பகுத்தறிவாளராக கருதப்படுகிறார். இங்குப் பகுத்தறிவாளர் என்பதன் பொருள் மொத்தப் பயன்பாட்டை உச்சமாக்க விரும்புவர், என்பதாகும்.
(viii) பயன்பாட்டை அளவிட முடியும்.

அட்டவணை : மொத்த, இறுதிநிலைப் பயன்பாட்டு பட்டியல்

அளவு	மொத்த பயன்பாடு TU	இறுதிநிலை பயன்பாடு MU
1	20	20
2	35	15
3	45	10
4	50	5
5	50	0
6	45	–5
7	35	–10

விளக்கம் :

- Mr. X என்பவர் பசியோடு இருக்கும்போது அவர் முதல் பழத்தை நுகர்வதிலிருந்து 20 அலகுகள் பயன்பாட்டை பெறுகிறார்.
- தொடர்ச்சியாக 2, 3, 4, 5, 6 மற்றும் 7 ஆப்பிளை நுகரும்பொழுது இறுதிநிலைப் பயன்பாடு 15, 10, 5, 0, –5 மற்றும் –10 ஆகவும் குறைகிறது. மேலும் மொத்த பயன்பாடு 35, 45, 50 ஆக அதிகரித்து பின்பு 45 மற்றும் 35 ஆக குறைகிறது.
- இறுதிநிலைப்பயன்பாடு குறைந்து பூஜ்ஜியத்தை அடைந்து பின்பு எதிர்கணயச் செல்கிறது.

குறைந்துசெல் இறுதிநிலைப்பயன்பாடு



வரைபட விளக்கம் :

- X அச்சில் ஆப்பிலும் Y அச்சில் மொத்தப்பயன்பாடு மற்றும் இறுதிநிலைப் பயன்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது.
- TU என்பது மொத்த பயன்பாடு ஆகும்.
- MU என்பது இறுதிநிலைப்பயன்பாடு ஆகும்.
- மொத்த பயன்பாடானது அதிகரித்துக் கொண்டே செல்லும். ஒரு குறிப்பிட்ட நிலைக்குப்பிறகு குறையத் தொடங்கும்.
- இறுதிநிலைப் பயன்பாடு குறையும்பொழுது பூஜ்ஜியத்தைவிட அதிகமாக இருக்கும் போது மொத்த பயன்பாடு அதிகரிக்கும்.

SURA BOOKS

- இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும்போது மொத்த பயன்பாடு உச்சத்தை அடைகிறது.
- இறுதிநிலைப் பயன்பாடு எதிர்கணியத்திற்கு செல்லும் பொழுது மொத்த பயன்பாடானது குறைந்து கொண்டே செல்கிறது.

முக்கியத்துவம் :

- பொருளியலின் பல விதிகளுக்கு இறுதிநிலைப் பயன்பாட்டு விதி அடிப்படையானதாகும். தேவை விதி, இறுதிநிலைப்பயன்பாட்டு விதியின் செயல்பாட்டினால் தோன்றியதாகும்.
- குறைந்து செல் இறுதி நிலைப்பயன்பாட்டு விதி பணத்திற்கும் பொருந்தும். ஏற்கனவே ஏராளமான பணத்தைப் பெற்றுள்ள செல்வந்தர் ஒருவர் மேலும் மேலும் வருமானத்தை கூட்டும்பொழுது, அவற்றின் இறுதிநிலைப் பயன்பாடு குறைகிறது.
- இவ்விதி பணக்காரர்களுக்கு அதிக வரிவிதிக்க ஒரு ஆயுதமாக நிதி அமைச்சருக்கு உதவுகிறது.
- இவ்விதி உற்பத்தியாளர்களுக்கு அவர் உற்பத்தி செய்திடும் பண்டங்களின் வடிவம், போன்றவற்றில் மாற்றங்களைச் செய்திட உதவுகிறது.

திறனாய்வு :

- இவ்விதி 'ஒரு பொருள் நுகர்வு' என்ற அடிப்படையில் எழுந்ததாகும். ஒரு நுகர்வோர் ஒரு நேரத்தில் ஒரே ஒரு பண்டத்தை மட்டுமே நுகர்வதாகக் கருதுவதால் நடைமுறையில் இவ்வெடுகோள் பொருந்தாது.
- இவ்விதியின்படி, நுகர்வோர் கால இடைவெளியின்றி தொடர்ச்சியாகப் பண்டங்களை நுகர வேண்டும். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இது சாத்தியமாகாது.
- பணத்தின் இறுதிநிலைப்பயன்பாடு மாறாமல் நிலையாக இருக்கும் என்பது இவ்விதியின் எடுகோளாகும். ஆனால் நடைமுறையில் இது சாத்தியமாகாது.
- பயன்பாடு என்பது மனிதனுக்கு மனிதன் மாறுபடும். எனவே பயன்பாட்டை துல்லியமாக அளவிட முடியாது.

78. **(அ) முன்னுரை :**

- ♦ ஒரு பொருளுக்கான 'தேவை' என்பது, அப்பொருளை வாங்குவதற்கான விருப்பத்தையும், போதிய வாங்கும் சக்தியையும் வாங்கிட வேண்டும் என்ற முடிவையும் குறிக்கும்.
- ♦ Dx = F(Px, Ps, Y, T, W)

(ஆ) தேவை விதி :

விலையும், தேவையும் எதிர்மறைத் தொடர்புடையன என்பதை தேவை விதி கூறுகிறது. இது ஒரு பொருளுக்கான விலையும், ஒரு குறிப்பிட்ட கால அளவில் அந்த பொருளுக்கான தேவையையும் குறிக்கும்.

(இ) இலக்கணம் :

ஆல்ஃபிரடு மார்ஷலின் கூற்றுப்படி "நிறைய பண்டங்களை விற்க வேண்டுமாயின், விலை குறைவாக இருக்க வேண்டும் அவ்வாறு விலை குறைவாக இருந்தால்தான் அப்பண்டத்தைப் பலரும் வாங்குவர். வேறு விதமாகக் கூறினால், விலை குறைவதால் தேவைப்படும் பண்டத்தின் அளவு கூடுகிறது. விலை கூடுவதால் தேவை குறைகிறது."

(ஈ) எடுகோள்கள் :

1. நுகர்வோரின் வருமானத்தில் மாற்றம் இல்லை.
2. நுகர்வோரது சுவையிலும் தேர்ந்தெடுத்தலிலும் மாற்றம் இல்லை.
3. பிற பொருட்களின் விலையில் மாற்றம் இல்லை.
4. பிற பதிலிகளை கண்டுபிடிக்கவில்லை.
5. தற்போதைய விலை இறக்கம் பின்விளையும் கூடுதல் விலை வீழ்ச்சிக்கு முகவுரை என்று மக்கள் உணராமை ஆகும்.

(உ) தேவைப்பட்டியல் :

தேவையின் அளவை காட்டுகின்ற அட்டவணையே தேவைப்பட்டியல் என்பதாகும்.

அட்டவணை

விலை (ரூ)	தேவை அளவு (கி.கி.)
5	10
4	20
3	30
2	40
1	50

விலையும், தேவையும் எதிர்மறையாக மாறக்கூடியது. இது தனியொரு நுகர்வோர் தேவைப்பட்டியலாகும்.

(ஊ) தேவை வளைகோடு : இந்த அட்டவணை மூலம் தேவை வளைகோட்டை வரையலாம்.

வரைபடம்



SURA BOOKS

(i) DD–என்பது தேவைக்கோடு ஆகும்.

(ii) தேவைக்கோடு இடமிருந்து வலமாக சரிந்து செல்கிறது.

(iii) விலை இறங்கிவரும்போது தேவையின் அளவு அதிகரிப்பதை இக்கோடு காட்டுகிறது.

(எ) தேவை வளைகோடு கீழ்நோக்கி சரிந்து செல்வது ஏன்?

(i) தேவை வளைகோடு சரிவதற்கான காரணம் குறைந்துச் செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி ஆகும்.

(ii) நுகர்வோர் குறைந்த விலையில் அதிகப் பண்டத்தையும் அதிக விலையில் குறைந்த பண்டத்தையும் வாங்குவார்.

(iii) தனி நபர் தேவைப்பட்டியலானது, ஒரு பண்டத்தின் பல்வேறு விலைகளில் வாங்க விரும்பும் பல்வேறு அளவை சுட்டிக் காட்டும் அட்டவணை.

தனி நபர் தேவைப்பட்டியல்

ஆரஞ்சு விலை (ரூபாய்)	தேவை அளவு (ஆரஞ்சு)
5	1
4	2
3	3
2	4
1	5

(ஏ) அட்டவணை விளக்கம் :

- விலை ரூ. 4 ஆக குறையும்போது ஆரஞ்சின் தேவை 2 ஆக அதிகரிக்கிறது.
- மேலும் விலை ரூ.3 ஆக குறையும்போது ஆரஞ்சின் தேவை 2–ல் இருந்து 3 ஆக அதிகரிக்கிறது.

இரண்டு நுகர்வோரது தேவைப்பட்டியல் மற்றும் அங்காடித் தேவைப்பட்டியல்

விலை (ஆரஞ்சு)	நுகர்வோர் 1	நுகர்வோர் 2	அங்காடித் தேவை
5	1	–	1
4	2	1	3
3	3	2	5
2	4	3	7
1	5	4	9

(ஐ) அங்காடியில் தேவை வளைகோடு :

அங்காடியில் விலை குறையும்போது தேவை கூடுகிறது



(i) நுகர்வோர்–I மற்றும் II–ன் தேவையின் அளவுகள் X–அச்சியிலும், அங்காடியில் நிலவும் விலை Y–அச்சியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) இவ்விரு நுகர்வோரின் மொத்த தேவை, அதாவது $D_1 + D_2 = DD_m$ ஆக குறிக்கப்பட்டுள்ளது.

(iii) DD_m அங்காடித் தேவை வளைக்கோடு ஆகும்.

(ஒ) தேவை விதியின் விதிவிலக்குகள் :

(i) சில விதிவிலக்கான சூழ்நிலையில் இவ்விதி இயல்பாக செயல்படுவதில்லை. இந்நிலைகளில் விலை ஏறும்போது தேவை அதிகரிக்கும் மாறாக விலை குறையும்போது தேவை குறையும்.

(ii) விலைக்கும், தேவைக்கும் நேரடித் தொடர்பு உண்டு.

(iii) இங்கு தேவைக்கோடு மேல்நோக்கி உயர்ந்துச் செல்லும்.

SURA BOOKS



(ஒ) தேவையின் விதிவிலக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- **வெப்ளன் விளைவு :**

  தார்ஸ்டின் வெப்ளன் என்னும் பொருளியல் அறிஞர் பணக்காரர்கள் சமுதாயத்தில் தங்களது அந்தஸ்து மற்றும் மதிப்புக்காகவே விலை உயர்ந்த பண்டங்களை அதிகம் வாங்குகிறார்கள் என்கிறார். (எ.கா. வைரம்)

- **கிஃபன் முரண்பாடு :**

  சர் இராபர்ட் கிஃபன் என்பவர் ஏழை, எளிய மக்கள் கீழ்நிலைப் பண்டங்களின் விலை அதிகரித்தால், அதனுடைய தேவை அளவு அதிகரிக்கும் என்றும் விலை குறைந்தால் தேவை அளவு குறையும் என்றும் விளக்குகிறார்கள். (எ.கா. சோளம், கேழ்வரகு).

79. முற்றுரிமையில் விலை, உற்பத்தி தீர்மானம் :

(அ) முற்றுரிமை போட்டி :

- பேராசிரியர் E.H. சேம்பர்லின் என்பவர் முற்றுரிமை போட்டியினை அறிமுகப்படுத்தினார்.
- இங்கு எண்ணிறந்த விற்பனையாளர்கள் ஒன்றுக்கொன்று நெருக்கமான பதிலீடாக கருதப்படும் பண்டங்களை உற்பத்தி செய்கின்றனர்.
- பண்டங்கள் ஒன்றுபோல் இருந்தாலும், அவை ஒரே தன்மையுடையன அல்ல.
- அவை ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் பண்டங்களாகும்.

(ஆ) முற்றுரிமை போட்டிற்கு எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

1. ஷாம்பூ – சன்சில்க், கிளினிக் பிளஸ், பான்ஸ், சிக், வெல்வட்
2. பற்பசைகள் – கோல்கேட், குளோசப், பினாகா, ப்ராமிஸ், விக்கோ வஜ்ரதந்தி, அங்கர்...

(இ) முற்றுரிமைப் போட்டியில் விலை மற்றும் பண்டஅளவை நிர்ணயித்தல்:

- முற்றுரிமைப் போட்டியில் நிறுவனம் சமநிலை அடைய இறுதிநிலை வருவாயும், இறுதிநிலை செலவும் சமமாக இருத்தல் வேண்டும். அதாவது E = MC = MR
- முற்றுரிமை போட்டியில் ஒவ்வொரு நிறுவனமும் எந்த விலையில் உற்பத்தி நிலையில் அதிகபட்ச இலாபம் கிடைக்குமோ அதனையே தெரிவு செய்துகொள்வார்.
- கீழ்கண்ட வரைபடம் ஒரு குறிப்பிட்ட நிறுவனம் எவ்வாறு சமநிலை அடையும் என்பதை விளக்குகிறது.



(ஈ) வரைபட விளக்கம் :

- MC, AC என்பன குறுகிய கால இறுதிநிலைச் செலவு மற்றும் சராசரி செலவு வளைக்கோடுகளாகும்.
- AR என்கிற சராசரி வருவாய், MR என்கிற இறுதிநிலை வருவாய் வளைகோடும் கீழ்நோக்கி சரிந்து செல்கிறது.
- E என்ற சமநிலை புள்ளியில் MR = MC ஆக அமையும்.
- OM என்பது சமநிலை உற்பத்தியாவாகும்.
- OP என்பது சமநிலை விலையாக நிர்ணயிக்கப்படுகிறது.
- இலாபம் என்பது சராசரி வருவாய்க்கும், சராசரி செலவுக்கும் உள்ள வேறுபாடாகும். MQ என்பது சராசரி வருவாய், MS என்பது சராசரி செலவு அதாவது QM – MS = SQ.
- SQ என்பது ஒரு பொருளுக்கான இலாபம்
- ஒரு பொருளுக்கான இலாபத்தை OM என்ற பண்ட உற்பத்தியின் அளவினால் பெருக்க அந்நிறுவனத்தின் PQ SR என்ற கோடிடப்பட்ட செவ்வக வடிவிலான இலாபம் கிடைக்கும்.
- எனவே குறுகிய காலத்தில் அந்நிறுவனம் OM அளவு உற்பத்தி செய்து அவற்றை OP விலைக்கு விற்று அதிகபட்ச இலாபத்தை பெறுகிறது.

(உ) நீண்டகாலம் :

- நீண்டகாலத்தில் தொழிற்சாலையில் உள்ள நிறுவனங்கள் உச்சஇலாபத்தை ஈட்டினால் புதிய நிறுவனங்கள் தொழிலில் நுழைந்து இலாப அளவை குறைக்கும்.
- நீண்டகாலத்தில் தொழிற்சாலைக்குள் இருக்கும் நிறுவனங்கள் நஷ்டத்தை அடைந்தால் சில நிறுவனங்கள் இத்தொழிலை விட்டு வெளியேறும்.

SURA BOOKS

- ஆகவே முற்றுரிமைப் போட்டியில் நீண்டகாலத்தில் நிறுவனங்கள் இயல்பு இலாபத்தையே பெறுகின்றனர்.

80. (அ) கீன்சின் நீர்மை விருப்பக் கோட்பாடு :

- பொதுவாக, மக்கள் தங்களது சொத்தின் ஒரு பகுதியை ரொக்கமாக வைத்திருக்க விரும்புவர்.
- ரொக்கம் என்பது நீர்மைத் தன்மையுடைய சொத்து ஆகும்.
- "ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ரொக்கமாக வைத்திருப்பதைத் தவிர்ப்பதற்காகக் கொடுக்கப்படும் வெகுமதியே வட்டி" என்று கீன்சு கூறுகின்றார்.

(ஆ) மூன்று நீர்மை விருப்ப நோக்கங்கள் :

மூன்று நோக்கங்களுக்காக மக்கள் பணத்தை ரொக்கமாக வைத்திருக்க விரும்புவர் என்று கீன்சு கூறுகிறார் அவைகள் :

1. பரிமாற்ற நோக்கம்.
2. முன்னெச்சரிக்கை நோக்கம்.
3. ஊக வாணிப நோக்கம்.

(1) பரிமாற்ற நோக்கம் :

பரிமாற்ற நோக்கம் என்பது அன்றாட செலவுகளை மேற்கொள்ள வைத்திருக்கும் ரொக்க பணமாகும்.

(2) முன்னெச்சரிக்கை நோக்கம் :

எதிர்பாரா செலவுகளைச் சமாளிக்க மக்கள் ரொக்கமாக பணத்தை வைத்திருக்க விரும்புவர் இதுவே முன்னெச்சரிக்கை நோக்க பணமாகும்.

(3) ஊக வாணிப நோக்கம் :

- சந்தையில் எதிர்காலத்தில், என்ன நடக்கும் என்பதை ஊகித்தறிந்து, இலாப நோக்கத்திற்காகச் செயல்படுவது ஊக வாணிப நோக்கமாகும்.
- வட்டி வீதத்தைத் தீர்மானிப்பதில் ஊக வாணிப நோக்கமே முக்கிய பங்கு வகிக்கிறது என்று கீன்சு கூறுகிறார்.
- பணத்தேவை வட்டி வீதத்தோடு எதிர்கணியத்தொடர்பு உள்ளது.
- ஒரு புறம் நீர்மை விருப்பமும், மறுபுறம் பண அளிப்பும் வட்டி வீதத்தை தீர்மானிக்கிறது என்று கீன்சு கருதுகின்றார்.



(இ) வரைபட விளக்கம் :

- 'L' என்பது நீர்மைத் தன்மை கொண்ட பணத்தையும் `M' என்பது பண அளிப்பையும் குறிக்கும்.
- r என்பது வட்டி வீதத்தைக் குறிக்கும்.
- 'L' வளைகோடும், `M' வளைகோடும் வெட்டும் புள்ளியில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகிறது.
- பணத்தேவை L_1 க்கு அதிகரிக்கும் பொழுது அல்லது பண அளிப்பு `$M_1$' க்கு குறையும் பொழுது வட்டி வீதம் `r_1' ஆக அதிகரிக்கும்.

(ஈ) திறனாய்வு :

- கீன்சின் கோட்பாடு, பொது வட்டிக் கோட்பாடு ஆகும். இது மற்ற வட்டிக் கோட்பாடுகளை மிகச் சிறந்ததாகும்.
- நீர்மைத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்று மற்ற அறிஞர்கள் குறை கூறுகின்றனர்.
- சேமிப்பு இல்லாமல் நீர்மைத் தன்மைக்குப் பணத்தை அளிக்க முடியாது.
- நீர்மைத் தன்மையற்ற சேமிப்புக்கு கொடுக்கப்படும் விலையே வட்டி வீதமாகும் என்று ஜேக்கப் வைனர் கருதுகின்றார்.

81. (அ) பணக்கொள்கை :

"பணக்கொள்கை என்பது பொருளாதார கொள்கையின் நோக்கங்களை அடைய பண அளிப்பு மற்றும் பணத்தை உற்பத்தி செய்ய ஆகும் செலவுகளை கட்டுப்படுத்த மைய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும்" என்று எட்வர்டு சாபிரே கூறியுள்ளார்.

(ஆ) பணக்கொள்கையின் நோக்கம் :

பெரும்பாலான நாடுகளில் பேரியல் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படை நோக்கங்களாவன.

(i) முழு வேலைவாய்ப்பு
(ii) நிலையான விலை
(iii) விரைவான பொருளாதார வளர்ச்சி
(iv) செலுத்து சமநிலை
(v) பொருளாதார நிதி

SURA BOOKS

(இ) பணக்கொள்கையின் கருவிகள் :

பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை இருவகையாக பிரிக்கலாம்.

(1) கடன் நிதி அளவு கட்டுப்பாட்டு முறைகள் (Quantitative credit control measures)

(2) தேர்ந்தெடுத்த கடன் கட்டுபாட்டு முறைகள் (Selective credit control measures)

(1) கடன் நிதி அளவு கட்டுப்பாட்டு முறைகள் :

கடன் நிதி அளவு கட்டுப்பாட்டு முறைகளில்

(i) வட்டி வீதம்

(ii) ரொக்க இருப்பு வீதம்

(iii) வெளிச்சந்தை நடவடிக்கைகள் முதலியன அடங்கும்.

(i) வட்டி வீதம்

- பொருளாதாரத்தில் அதிகப்படியான பணப் புழக்கம் ஏற்படுமாயின் மைய வங்கி பண புழக்கத்திலிருந்து பணத்தின் அளவைக் குறைக்க வேண்டும் வங்கி வட்டி வீதத்தை அதிகரிப்பதின் மூலம் இதைச் செய்யலாம்.
- மைய வங்கி வட்டி வீதத்தை அதிகரிக்கும் பொழுது வணிக வங்கிகள் வசூலிக்கும் வட்டி வீதமும் அதிகரிக்கும்.
- வட்டி வீதம் அதிகரிப்பதால் (முதலீட்டாளர்கள்) கடன் பெறும் ஆர்வம் வணிகர்களிடையே குறைந்து விடுகிறது.
- பண வீக்கத்தைக் குறைக்க மைய வங்கியானது வங்கி வட்டி வீதத்தை உயர்த்தும்.

(ii) ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுதல் : (Cash Reserve Ratio)

- வணிக வங்கிகள் உருவாக்கும் கடன் அளவு அதனுடைய ரொக்க இருப்பு வீதத்தை பொறுத்து அமையும் ரொக்க இருப்பு வீதத்தை மாற்றும் அதிகாரம் மைய வங்கிக்கு மட்டுமே உண்டு.
- பணவீக்க காலத்தில் பொருட்களின் விலை உயர்வை தடுக்கவும் கடன் அளவை கட்டுப்படுத்தவும் இக்கருவியே பயன்படுகிறது.

(iii) வெளிச்சந்தை நடவடிக்கைகள் :

- மைய மாநில அரசுகளின் கடன்பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் வெளிச்சந்தை நடவடிக்கை நடைபெறுகிறது.
- போதுமான அளவு அரசு கடன்பத்திரங்களை மைய வங்கி வைத்திருத்தல்.
- நல்ல முன்னேற்றமடைந்த பண உண்டியல் அங்காடி (Bill Market Securities)
- வணிக வங்கிகள் ரொக்க இருப்பு வீதத்தை நிலையாக வைத்திருக்கும் திறமை.

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டு முறைகள் :

- திட்டமிட்ட பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் நாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டு முறைகள் (கருவிகள்) முக்கிய பங்கு வகிக்கின்றன. கடன் அளவு கட்டுப்பாட்டு முறைகளை விட தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டுக் கருவியானது வணிக வங்கிகளின் எல்லா வகையான கடன்களையும் கட்டுப்படுத்துகிறது.
- இது தேவையற்ற இனங்களில் கடன் அளவைக் குறைத்து பயனுள்ள இனங்களில் கடன்அளவு செல்லுமாறு வழி நடத்துகிறது. 1955 முதல் மைய வங்கியானது இம்முறை பயன்படுத்துகிறது.

(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டு கருவிகளில் கீழ்க்கண்டவைகள் அடங்கும் :

1) கடன் பத்திரங்களை வாங்க அளிக்கப்படும் கடன்அளவில் குறைந்த பட்ச உச்ச வரம்பை நிர்ணயித்தல் (உ.ம்.) பற்றாக்குறையாக உள்ள பங்குகள் மற்றும் உணவு தானியங்களும் கச்சாப் பொருட்களும் அதாவது கடன் பத்திரங்கள் வாங்கும் பொழுது செலுத்தும் விலையில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை ரொக்கமாக செலுத்துதல்.

2) கடன் விரிவாக்க எல்லையை தீர்மானித்தல்

3) சில துறைகளை ஊக்கப்படுத்தவும் சில துறைகளின் ஆர்வத்தை குறைக்கவும், பல விதமான வட்டி வீதங்கள் விதிக்கப்படுகிறது. நமது நாட்டில், கடைசி கருவியாக இது பயன்படுகிறது.

4) மைய வங்கியானது சில விதிகளை அல்லது கொள்கைகளைப் பின்பற்றுமாறு வணிக வங்கிகளை கேட்டுக்கொள்ளுதல் அல்லது அறிவுறுத்தல்.

(உ) முடிவுரை :

பணவீக்கத்தை கட்டுப்படுத்த பணவியல் கொள்கை பயனுள்ளதாக இருக்கும். 1930ல் ஏற்பட்ட பொருளாதார மந்த காலத்தில் இக்கொள்கை பயனுள்ளதாக இல்லை.

❁❁❁❁

SURA BOOKS